LIBRARY
6 DEC 1963
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 23rd March 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER : Question Nos. 343 and 344 have been postponed.

மீனவர்களுக்கான வீடுகள் (தஞ்சை மாவட்டம்)

*345 கேள்வி.—திரு. ஆ. துரை அரசன் : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளில் வாழு கின்ற மீனவர்களுக்கு விடுகட்டிக் கொடுக்கும் திட்டமுண்டா ?

(இ) 1962-ல் எத்தனை குடும்பங்களுக்கு மீன்பிடித் தொழிலுக் காக 'நைலான்' வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் கடலோர மீனவர் கூட்டுறவுச் சங்கங் களின் உறுப்பினர்களுக்கு 1959-60 முதல் 1961-62 வரை கீழே கண்டவாறு 51 வீடுகள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டது:—

1. கரையூர் தெரு மீனவர் கூட்டுறவு சங்கம்	..	12 வீடுகள் 1959-60
2. ஏரிப்புறக்கரை மீனவர் கூட்டுறவு சங்கம்	..	8 வீடுகள் 1959-60
3. காவேரிப்பட்டினம் மீனவர் கூட்டுறவு சங்கம்	..	9 வீடுகள் 1960-61
4. மல்லிப்பட்டினம் மீனவர் கூட்டுறவு சங்கம்	..	12 வீடுகள் 1961-62
5. கரையூர் தெரு மீனவர் கூட்டுறவு சங்கம்	..	10 வீடுகள் 1961-62
மொத்தம் :		51 வீடுகள்

மேற்சொன்னவற்றில், 29 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. எஞ்சியுள்ள வீடுகள் 31—3—1963 முடிவிற்குள் கட்டி முடிக்கப்படு மென எதிர்பார்க்கப்படுகிறது.

[23rd March 1963

அம்மாப்பட்டினத்தில் மீனவர்களுக்காக 200 வீடுகளுடன் கூடிய ஒரு காலனியும், ஒரு சமுதாய அரங்கமும் பள்ளிக்கூடமும் கட்டும் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பயனடைபவர்கள் இதற்குக் கொடுக்கவேண்டிய பங்கினை அவர்கள் இன்னும் கொடுக்காததால், திட்டம் இன்னும் நிறைவேறவில்லை.

தற்போதைய நெருக்கடி நிலைமை காரணமாக, 1962-63-ல் வீடுகள் கட்ட மீனவர்களுக்கு உதவித் தொகையும் கடனும் வழங்கும் திட்டம் தள்ளிப்போடப்பட்டது.

(இ) 1962-ல் தமிழ் நாட்டில் 64 மீனவர் குடும்பங்களுக்கு 'நைலான்' வழங்கப்பட்டது. வாடகை கொள்முதல் திட்டத்தின் கீழ் படகுகளை வழங்கும்போது நைலான் நூலும் சேர்த்து வழங்கப்படுகிறது. 64 குடும்பங்களில், 4 குடும்பங்கள் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். மொத்தம் 5,400 கிலோ நைலான் நூல் வழங்கப்பட்டது. இதில் 300 கிலோ தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 4 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

திரு. சி. பொன்னுசாமி : தூத்துக்குடி துறைமுகத்தில் 20,000 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள். அதிலிருந்து மீனவர்களுககாக இடம் ஒதுக்கி, வீடு கட்டும் திட்டம் இருக்கிறதா? அப்படியானால் எத்தனை வீடுகள் கட்டுவதற்கு திட்டம் இருக்கிறது?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : என்னிடம் தகவல் இல்லை. அதைச் சார்ந்த அமைச்சரிடம் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. இரா. நாராயணன் : கிராமப் புறங்களிலுள்ள மீனவர்களுக்கு நைலான் வலைகள் வழங்குவதற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : நான் முக்கிய கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே சொன்னேன், நைலான் நூல்களும், வலைகளும், பாப்லோ போட்டுகள் கொடுக்கப்பட்டவர்களுக்குத் தான் கொடுக்கப்பட்டு வருகிறது என்று சொன்னேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : அதிராமபட்டிணம், முத்துப்பேட்டை, நாகை போன்ற இடங்களில் மீனவர்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அடிக்கடி, காற்று, வெள்ளம் ஏற்பட்டு குடிசைகள் பாதிக்கப்படுகின்றன. அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் யோசனை செய்யுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : மீனவர்களுக்குப் பொதுவாக வீடு கட்டும் திட்டத்தை விளக்கிச் சொன்னேன். வீடுகள் என்று சொன்னால், உடனடியாக எல்லா வீடுகளையும் கட்ட முடியாது. ஒரு குப்பத்திற்கு 6 வீடுகள் என்ற அடிப்படையில் கட்டுவதாக இருக்கிறது. அதுவும்கூட நெருக்கடியின் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

23rd March 1963]

திரு. சி. பொன்னுசாமி : *நைலான் நூல் இப்பொழுது இந்தியா விலே தயாரிக்கப்படுவதாகச் சொல்லுகிருர்கள். இந்தியாவிலே தயாரிக்கப்பட்ட நூல் மீனவர்களுக்குப் போதுமானதாக இருக் கிறதா ?*

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : *இப் பொழுது இந்தியாவிலே செய்யப் படுகின்ற காரணத்தால், இனி மேல் அது தாராளமாகக் கிடைக்குமென்ற நம்பிக்கை அரசாங் கத்திற்கு இருக்கிறது.*

Sugarcane (price)

* 346 *Q*.—SRI K. R. NALLASIVAM (on behalf of SRI M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Agriculture be pleased to state the details of the proposal to re-fix the price for sugarcane supplied to sugar factories in the State?

THE HON. SRI P. KAKKAN: The question of fixation of sugarcane prices is a matter which is dealt with by the Government of India. The sugarcane prices announced by the Government of India in respect of the sugar factories in this State for the current year i.e., 1962–63 have been republished at page 7474 of Part III in the *Fort St. George Gazette*, dated the 31st November 1962.

Proposals to refix the sugarcane prices for the year 1963–64 are for the consideration of the Government of India.

கரும்பு விலையை நிர்ணயிக்கும் பொறுப்பு இந்திய அரசாங் கத்தைச் சேர்ந்தது. நடப்பு ஆண்டில் (அதாவது 1962-63-ல்) இம் மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகளுக்காக இந்திய அரசாங்கம் நிர்ணயித்துள்ள கரும்பு விலைகள், 1962 நவம்பர் மாதம் 21-ம் தேதி யுள்ள செய்ன்ட் ஜார்ஜ் கோட்டை கெஜட், மூன்ரும் பாகத்தின் 7474-ம் பக்கத்திலே (ஆங்கிலத்தில்) வெளியாகியுள்ளன.

1963-64-ம் ஆண்டிற்காக, கரும்பு விலைகளை மீண்டும் நிச்ச யிப்பது, இந்திய அரசாங்கத்தின் ஆலோசனைக்குரிய விஷய மாகும்.

திரு. க. ர. நல்லசிவம் : *நமது ராஜ்ய அரசாங்கம் கரும்பு விலை யை மேலும் உயர்த்துவதற்கு மத்திய சர்க்காருக்குச் சிபாரிசு செய்திருக்கிறதா ?*

கனம் திரு. பூ. கக்கன் : *அந்த மாதிரி ஆலோசனை கூறியிருப்ப தாக எனக்கு ஞாபகம் இல்லை.*

சாராயம்

** 347* **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** *கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—*

(அ) சர்க்கரை ஆலைகளில் கழிவுப் பொருளாக இருக்கும் வெல்லப்பாகினை (molasses) *நாட்டுச் சாராயம் காய்ச்ச உப யோகப் படுத்தப்படுவது அரசாங்கத்திற்கு தெரியுமா ?*

(இ) அதனை தடைப்படுத்தும் யோசனையுண்டா ?